சப்தம், தாளச் சொற்கட்டு



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண் : 220

சப்தம்

என்னும்

தாளச் சொற்கட்டு

பரதம் காசிநாதகவி, மன்னர் சகசி,
பரதம் நாரணகவி
ஆகியோர் இயற்றியவை

பதிப்பாசிரியர் :
நா. விசுவநாதன்,
தெலுங்கு பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

2007] விலை : ரூ. 80-00

0220
Sarasvati Mahal Library. Thanjavur

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	சப்தம் என்னும் தாளச்சொற்கட்டு
பதிப்பாசிரியர்	:	நா. விசுவநாதன்
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்	:	220
மொழி	:	சம்ஸ்கிருதம், தமிழ்
பதிப்பு	:	மூன்றாம் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	2007
தாள்	:	TNPL 17.8 kgs.
நூல் அளவு	:	21 x 14 c.m.
பக்கங்கள்	:	192
படிகள்	:	500
எழுத்து	:	16 & 12
அச்சிட்டோர்	:	சரசுவதி மகால் நூலகம்
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	நாட்டியம்
விலை	:	ரூ. 80-00

வெளியீட்டாளர் முகவுரை

சரசுவதி மகால் நூலகம் எண்ணற்ற பன்மொழி சுவடிகளைப் பாதுகாத்து பராமரித்து வருவதோடு அவற்றை நூல்களாக பதிப்பித்து அவை கூறும் மாட்சிமை கருத்தினை மக்களிடம் கொண்டு சேர்க்கும் நற்பணியினை ஆற்றிவருகின்றது. அவ்வகையில் வெளிவருகிறது பரதம் காசிநாதகவி, மன்னர் சகசி, பரதம் நாரணகவி ஆகியோர் இயற்றிய **'சப்தம் என்னும் தாளச்சொற்கட்டு'** என்னும் நூல்.

இந்தியத் துணைக்கண்டத்தில் திகழும் நுண்கலைகளில் பரதநாட்டியம் உலக அளவில் சிறந்ததொரு இடத்தைப் பெற்றுத் திகழ்கின்றது. இத்தகைய நாட்டியக்கலைக்கு அடிப்படையானது ஜதிகள். குறிப்பிட்ட தாளத்திற்குள் அடங்கும் சொற்கட்டுகளின் வரிசையே 'ஜதிகள்' என்றும் 'சொற்கட்டுகள்' என்றும் அழைக்கப்படும். இத்தகைய சொற்கட்டுக்களின் அளவுக்குத் தக்கபடியே நாட்டியக் கலைஞர்கள் தங்களது அங்க அசைவுகளினால் வெளிப்படுத்தி மக்களை மகிழ்விப்பார்கள். இந்த சப்தம் என்னும் தாளச்சொற்கட்டு எனும் நூல் 1985ஆம் ஆண்டில் முதற்பதிப்பாகவும், 1997ல் இரண்டாம் பதிப்பாகவும் வெளிவந்தது. முதலிரண்டு பதிப்புகள் வெளிவந்த சில ஆண்டுகளிலேயே இந்நூல் முழுவதும் விற்பனையாகி விட்டது. இந்நூல் தற்போது மூன்றாம் பதிப்பாக வெளிவருகிறது.

இந்நூல் ஆராய்ச்சியாளர்களுக்கும் மாணவர் களுக்கும் பெரிதும் பயன்தரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்நூலை சரசுவதி மகால் நூலகத்தின் முன்னாள் தெலுங்கு பண்டிதர் திரு. என். விஸ்வநாதன் அவர்கள் செவ்வனே பதிப்பித்துள்ளார். அவருக்கு என் பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவர நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கும், இந்நூல் சிறப்புற வெளிவரத் துணைநின்ற சரசுவதி மகால் நூலக நிருவாக அதிகாரி மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு. சாமி. சிவஞானம், எம். ஏ., அவர்களுக்கும், இந்நூல் கணினி அச்சில் வெளிவர கணினி பிரிவில் பணிபுரிந்த அனைவருக்கும் எனது பாராட்டுதல் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சா. விஜயராஜ் குமார், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
22-9- 2007

முகவுரை

தென்னிந்திய இசை, தொன்மையும் பெருமையும் வாய்ந்ததென இசை வல்லுநர் கூறுவர். கர்நாடக இசையும்-பரதநாட்டியமும் பழமையும்பெருமையும் வாய்ந்தன வாகும். அண்மைக் காலத்தில் பல பரத நூல்களும், இசை நூல்களும் வெளிவந்துள்ளன. இன்னும் பல நூல்கள், சரஸ்வதி மகால் நூலகம் வாயிலாக வெளிவரவும் உள்ளன.

ஆனால், வாச்சிய மரபுப் பிரிவில், அதிகமாக நூல்கள் வெளிவரவில்லையே என்ற குறைபாடு உண்டு. அவ்வகையில் ஓரளவேனும் நிறைவு செய்ய இன்று, இந்நூல் பதிப்பாகியுள்ளது. வாச்சிய மரபில் தோன்றிய எழுத்து (ஜதி) மரபினை ஆராய்ச்சி செய்யும் நல்லாசிரியப் பெருமக்களுக்கு இந்நூல் பயன் தருமென, எல்லாம்வல்ல நடேசனை வணங்கி எனக்குத் தெரிந்த சில வார்த்தைகள் கூற முயலுகிறேன்.

தாண்டவாதி பேதங்கள், நடனத்திலுண்டான விசாரங்கள், அனந்தமானவை, தாள பேதங்களும் தாளத்திலுண்டான வழிமுறைகளும், எல்லாம்வல்ல நடராஜமூர்த்தியின் ஆடலின் மூலம் தோன்றிற்றெனப் பல நூல்களின் வாயிலாக அறியமுடிகிறது.

சப்தோ த்வனிஸ்ச வர்ணஸ்ச மிருதங்காதி பவோத்வனி,
சர்வ சப்தோ நபோவிருத்தி: ச்ரோத்ரோத்பன்னஸ்து க்ருஹ்யதே
ஸ்ரீமத்தாளாத்மகம் நிருத்தம் தாளோ நாதாத்மகோ மத:
நாதோ யதாத்மவான் தத்தே நமஸ்தஸ்மை பினாகினே
பகாரோ ஸுத்ர தாரஸ்ச ரேபாந்தோ ராகமுச்யதே
தகாரஸ் தாளமாப்னோதி இத்யேதே பரதலக்ஷணம்
அங்கேநாலம்பயேத் கீதம் ஹஸ்தேனார்தம் ப்ரதர்சயேத்
சக்ஷுர்ப்யாம் தர்சயேத்பாவம் பாதாப்யாம் தாளமாத்ருசேத்
கீதம் வாத்யம் ததா நிருத்யம் த்ரயம் சங்கீத முச்யதே

என்பது சான்றோர் வாக்கு

சுருதி, லயம் ஆகிய இரண்டையும் சங்கீதத்தில் தாய், தந்தையரெனக் கூறுவர். லயப் பிரிவில்தான் மிருதங்க வாத்யமும், சுத்தமத்தளம் போன்ற தோற்கருவிகள் தோன்றின. சப்தம் என்பது த்வனி, வர்ணம் (சொற்கள்) எனவும், மிருதங்கம் முதலிய வாத்யங்களிலிருந்து ஒலிக்கும் ஒலி அல்லது சொற்கள் எனவும் நிகண்டு கூறுகிறது.

அனைத்து சப்தங்களும் ஆகாய மூலமாக நம் காதுகளில் ஒலிக்கப்பட்டு, அந்த ஒலிகளின் குறிப்பை நம்மால் அறிய முடிகின்றது. "வீசீதரங்கநியாயம்" என்று வடமொழியில் பழமொழி ஒன்று கூறுவர். லயப் பிரிவில் உண்டான சப்தக் கோர்வைகளின் உபயோகம் நாட்டியத்தில் மிக முக்கியம் எனத்தென்படுகிறது.

தஞ்சையில் மூன்று நூற்றாண்டுகளாக நட்டுவாங்கமேளம், பாகவதமேளம் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று ஆதாரமாகப் பிணைந்து, பரதக்கலை வளர்ச்சிக்குப் பாடுபட்டன. பெண்கள் ஆடும் லாஸ்ய முறையும், ஆடவர்கள் ஆடும் ஸாத்விகாபிநயம் என்னும் முறையும் சமமாக வளர்ச்சியடைவது பரதக் கலைக்கு இன்றியமையாததாகும்.

பரதநாட்டியத்திலும், பாகவதமேளா நாட்டியத்திலும் சப்தம் என்னும் சொற்கட்டு சொல்லும் பழக்கம் அன்றும் இன்றும் உள்ளது. பாகவதர்கள், நட்டுவனார்கள் சிருஷ்டித்ததே இந்த சொற்கட்டுகளாகும்.

*தத்தித்தோ டெவ்வென்று சத்தம் பிறக்குமென
முத்தமிழோ ரெல்லா மொழிந்தார்கள் - எத்திறமுந்
தன்வழி யொன்றித் தனித்தனியே வாராவாம்
பின்னு மடைச்சொல்லாம் பேசு.

---

* பஞ்சமரபு 147 - 151 பக்கம், எழுத்து மரபு - 1973. (இசைத் தமிழ் நூல்)

ஒத்துக் கவுத்துவமே யொண்டாள வாச்சியமே
பத்துப் பயில்கின்ற வாச்சியமே - முத்தமிழோர்
பாங்கான வோசையும் பற்று மெனவுரைத்தார்
பூங்கா வகத்தியனார் போந்து. 121

வைத்த மலைப்பு முரிப்புத் துடுக்கமுடன்
இத்த குளந்தரியோ டிந்நான்கு - மைத்தடங்கண்
மாதே வழுவாமல் வாச்சியத்தைக் கொண்டியற்றி
லீதேயிக் கூத்துக்கியல்பு. 122

சப்தம் எனும் சொற்கட்டு சொல்லும்பொழுது நிருத்த பாகம் பிரதானமாகத் தென்படும். சொற்கட்டு வகைகளில் வரும் சாகித்யங்களுக்கேற்ப சொற்ப நிருத்தியமும் தென்படும்.

'சப்தம்' அல்லது **'சொல்'** என்றாலே **சுத்தநிருத்தத் தைத்தான்** குறிக்கும். பரதநாட்டியத்தில்தான் நிருத்தப் பாங்கினை மிகத் தெளிவாகக் காணலாம். பாகவதமேளா நாட்டியத்தில் நிருத்த பாகம், பழமையில் இருந்திருத்தல் வேண்டும். ஆனால் இன்றுள்ள பாகவதமேளா நாட்டியத்தில், பழமையான மரபு மறைந்து, அத்திபூத்தாற்போல் மிதமான நிருத்தபாகத்தையே தென்படச்செய்கிறார்கள் பாகவதர்கள்.

ஆலய வழிபாட்டில், தோன்றிய, நர்த்தன வழிமுறை, அரசவைகளில் நிகழ்ந்த நாட்டியக் கச்சேரி முறை, செல்வந்தர்கள் இல்லங்களில் நிகழ்ந்த நாட்டியக்கச்சேரி முறை முதலிய இம்மூன்று சம்பிரதாய முறைகளில் வளர்ந்ததே இன்றுள்ள நமது பரதநாட்டியக் கச்சேரி முறையெனத் தெரிகிறது. உத்தமமான பரதக்கலை ஆலயங்களில் நிகழ்ந்த நர்த்தன வழிமுறையே ஆகும்.

அன்றும் இன்றும் பெண்கள் மட்டுமே பரதநாட்டியத்தில் பங்கேற்றனர். தென்னகத்தில் பரதநாட்டியப் பாரம்பர்யம் எப்படி வளர்ந்ததோ அவ்விதமே ஆடவர்கள் மட்டும் ஆடும் பாகவதமேளா நாட்டியப் பாரம்பர்யமும்

நன்கு வளர்ந்தது. இன்று நடைபெறும் சபா கச்சேரிகளில் கூட நட்டுவாங்க சம்பிரதாயம், பாகவதமேளா சம்பிரதாயம் கையாளுவதைக் காணமுடிகின்றன. மேலும் இன்றைய பரதநாட்டியத்தில் பல இந்திய சம்பிரதாய பாணிகள் கையாளுவதையும் காணலாம்.

யாவர்ண பத வாக்யார்த கத்ய பத்ய ஸ்வரூபிணி
வாசி நர்தயது க்ஷிப்ரம் மே தாம் தேவி ஸரஸ்வதி
நாதேன வ்யஜ்யதே வர்ண: பதம் வர்ணாத்பதாத்வச:
வசஸோ வ்யவஹாரோயம் நதாதீன மதோ ஜகத்.

என நாராயணோபநிஷத் கூறுகிறது.

நாதோபாஸனயா தேவா ப்ராம்ஹ விஷ்ணு மஹேச்வர: என்று சங்கீத சாஸ்திர விற்பன்னர்கள் கூறுவர். நாதத்தினால் (சப்தங்கள்) எழுத்துக்களும், எழுத்துக்களிலிருந்து வியவஹாரங்களும் உண்டாயிற்று. நாட்டியத்திற்கு மிகவும் தேவைப்படுவது சொற்கட்டு அல்லது சப்தங்கள் எனவும் தெரிகிறது.

16-ஆம் நூற்றாண்டில் தென்னகத்தில் வீற்றிருந்த நட்டுவாங்கப் பெருமக்கள் அனைவரும் குண்டலி, பேரணி, குஜராத்தி, ஜக்கிணி, தண்டலதிகா, சியாமளா, ப்ரேங்கணீ, டக்கிணீ, சாரீ, பஹுசாரீ, சுத்தம், மார்க்கம் எனும் கேசரபூசர, தேவ, ராஜநாட்டியங்களில் வரும் விசித்திர நாட்டிய மரபுகளை உணர்ந்தவராக இருத்தல் வேண்டும் எந்றும், மேலும் திராவிடம், தெலுங்கு, வடமொழி, பாகதம், பாண்டீரம் மற்றும் வடஇந்திய மொழிகளையும் கற்றுணர்ந்தவராக இருத்தல் வேண்டும் என்றும், இத்துணையும் தெரிந்தவர்களே தேவாலய சந்நிதியில் நட்டுவாங்கம் செய்ய உத்தமமானவர் என தாளதீபிகை என்னும் நூலில் நட்டுவ லக்ஷணம் கூறப்பட்டுள்ளது.

தஞ்சையில் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பாக பரதநாட்டியத்தின் பாரம்பர்யத்தை சுட்டிக்காட்டும் விதமாக அமைந்துள்ள சொற்கட்டுகள் இந்நூலில் இடம்பெற்று

உள்ளன. தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்கள் மற்றும் மராட்டிய மன்னர்கள் போன்றவர்கள், தாளலக்ஷண நூல்கள், பரதநூல் தொகுப்புக்கள், இராகலக்ஷண தொகுப்புக்கள், பலவற்றை தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் சேர்த்து வைத்துள்ளார்கள். இம்மன்னர்கள் அனைவரும் தமிழகத்தில் நிகழ்ந்துள்ள பரதக்கலையின் பாரம்பர்யத்தைப் போற்றி பேணி வளர்த்துள்ளார்கள்.

இரகுநாத நாயக்கர், விஜயராகவ நாயக்கர் (1614 to 1974 A. D.) என்னும் மன்னர்கள் தஞ்சையை ஆட்சி செய்தவர்கள். பரதநாட்டியம், பாகவதமேளா நாட்டியம் போன்ற சம்பிரதாயங்கள் இம்மன்னர்களின் காலகட்டத்தில் வளர்ந்தன. நாயக்க மன்னர் காலத்தில் நாட்டிய நிகழ்ச்சிகளின் குறிப்பு கீழ்க்காணுமாறு உள்ளது.

விஜயராகவ நாயக்கர் அவையில் சந்திரரேகை, சண்பகவல்லி மூர்த்திமாம்பா - கோமளவல்லி, லோகநாயிகை, சசிரேகை, இரத்தினகிரி, பாகீரதி போன்ற அரசு விருதுடைய பெண்கள் முறையே - சப்தசூடாமணி பிரபந்தம் (அற்புதச் சொற்கட்டு பிரபந்தம்) சௌக்க கால பதம், துருபதம் (தரு), சிந்துபதம், குறவஞ்சி பிரபந்தம், பேரணி நாட்டியம், (கூர்ஜரி) குஜ்ஜரி நடனம், தண்டலாஸ்யம், பந்தாட்ட நிருத்தியம், குஜராத்தி நாட்டியம், தேசீ நாட்டியம், சிவலீலை நடனம், ஜக்கிணி நாட்டியம் முதலிய ஆடல் பாடல்கள் நிகழும்பொழுது, அந்நிகழ்ச்சிகளில் பெண்கள் மட்டுமே பங்கேற்றனரென இரகுநாதகாப்யுதயம், இராஜகோபால விலாசம் போன்ற நூல்கள் சான்றளிக்கின்றன.

விஜயராகவ நாயக்கர் காலத்துப் பெண்மணி **"சந்திரரேகை"** என்பவர் தேர்ச்சி பெற்ற ஆடலரசியாக மன்னர் சபையில் வீற்றிருந்தவர். மன்னரால் பல விருதுகள் பெற்றவர். சிறந்த சொற்கட்டு பிரபந்தப் பாடலுக்குகேற்ற

வகையில் ஆடல் புரிந்தவர். இவ்விதமாக இம்மன்னர் காலத்தில் பரதக்கலையின் வளர்ச்சி தெரிந்தாலும் அக்காலத்து சொற்கட்டு வகைகள் நம் கண் முன்னால் பார்க்க முடியவில்லையே என எண்ணி ஏங்கினேன். ஆனால் தற்சமயம் **"ஆதிபரதம்"** என்னும் பரத நூலின் தொகுப்பை பார்க்க நேரிட்டது. அதில் சொற்கட்டுக்கு உதாரணம் கிடைத்தது. அதனையும் மனமகிழ்ச்சியுடன் இந்நூலில் வெளியிட்டுள்ளேன்.

இம்மன்னர் காலத்தில் **"ஜக்கிணிதரு", "சலாம்தரு", "கௌத்துவம்" கைவாரகீத பிரபந்த வகையறாக்கள்** ஏராளமாக இருந்திருத்தல் வேண்டும். சிருங்கார சங்கீர்த்தனாச்சாரியராக விளங்கியவர் அன்னமாசாரியர் அவருக்கும் முன்பாக சாதுர்லக்ஷ சங்கீர்த்தனாசாரியராக விளங்கியவர் கிருஷ்ணமாசாரியார் என்பவராவார். இவர் சிம்மங்கிரி நரஹரியின் பக்தர், வைணவமத அபிமானி, காகதீய பிரதாபருத்ரனின் சமகாலத்தவர். ஏராளமான கீத பிரபந்தங்கள் இயற்றியவரென சிம்மங்கிரி வசனங்களில் சான்றுகள் கிடைக்கின்றன.

சாதுர்லக்ஷம் சங்கீர்த்தனாசாரியாரின் முத்திரை **சிம்மங்கிரி நரஹரி நமோ தயாநிதே** எனவிருக்கும். இவரது தசாவதார வருணணை கீதமும், பிரபந்தமும் அதற்கு உண்டான சொற்கட்டும் அபூர்வ மேற்கோளாக ஆதிபரதமெனும் நூலில் கிடைத்துள்ளது. அதனையும் இந்நூலில் வெளியிட்டுள்ளேன். (பக்கம் 90).

சகசி மன்னர் காலத்து பரத நூற்தொகுப்பு ஆதிபரதம் என்னும் மற்றொரு நூலாகும். இன்று இந்நூல் தமிழகத்தில் வழங்கிவரும் பரதக் கலைக்கும், தமிழ்ப் பாரம்பர்யத்திற்கும் சில மேற்கோள்களை ஆங்காங்கே தமிழில் தந்துள்ளனர். இவ்விரு பரத நூற்தொகுப்புக்களும் நாயக்கர், மராட்டியர் போன்ற மன்னர்களின் காலத்தில் தோன்றியன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழிசை வரகவிகளும், சொற்கட்டு பாரம்பர்யமும்

கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தரின் தக்காயாக்கப்பரணி என்னும் நூலில் ஜதியைப் பற்றி இவ்வாறுள்ளது.*

கர தலந் தருந் தம ருக சதி பொதி
கழல் புனைந் தசெம் பரி புர வொலி யொடு
கல கலன் கலன் கல னென வரு மொரு
கரி யகஞ் சுகன் கழ லினை கரு துவாம்

வேறு

சதகோடி விததாள சதிபாய முகபாகை குதிபாய்கடா எனத் தொடங்குகிறது.

ஒட்டக்கூத்தரின் காலத்தில் எண்ணற்றத் தாளவிதங்கள் இருந்தன. ஜதி பாரம்பர்யமாகத் தொன்மையானது என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டு.

சொற்கட்டு என்கிற சப்தங்களின் பாரம்பர்ய உதாரணங்கள் பல திருப்புகழில் கிடைக்கின்றன. வரகவியாக விளங்கியவர் அருணகிரிநாதர். சந்த ஒலிக் குறிப்புக்களாகத் தமது சாகித்தியங்களில் இடையிடையே உட்படுத்திக் காட்டியுள்ளார் அருணகிரிநாதர். ஜதி பாரம்பர்யத்திற்கு முன்னோடியாக நிற்பவர் அருணகிரிநாதர் என்றால் மிகையாகாது. அருணகிரிநாதரின் சப்தங்கள் பின்வருமாறு.

---

* காப்புச் செய்யுள்.

திமித திமிதிமி மத்தளி டக்கைகள் - சேக சே சே
எனவே துகுதுகு த்தென வொத்துகள்
துடிக ளிடிமிக வொத்தும முங்கிட
டிமுட டிமுடிமு டிடடிமெனத்தவி - லெழுமோசை

வேறு

தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தபதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு - கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்திரப்பவி ரிக்குத் திரிகடக - என வோதக்

கொத்துப் பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புகை புக்குப் பிடியென - முதுகூகை

வேறு

தகத தகததத தந்தத்த தந்தத
திதிதி திதிதிதி திந்தித்தி திந்திதி
தகுகு தகுதகுகு குந்தத்த தந்தகுகு - திந்தோதி

சகக - சககெணக - தந்தந்த - குங்கெணக
தகக - தகதகக - தந்ததத தந்தகக - என்றுதாளம்

வேறு

தோதிமி தித்தித் திமித்த டிங்குகு
டிகுகு டிக்குட் டிகுக்கு டிண்டிமி
தோதிமி தித்தித் தனத்த தந்தவெ னிசையோடே

அருணகிரிநாதர் இவ்வாறு தமது படைப்பில் தாமறிந்த சொற்களை (சப்தங்களை) அமைத்துக் காட்டுகிறார். அவர் காலத்தில் கீத பிரபந்த ஜதிகள் ஏராளமானவை புழக்கத்தில்

இருந்திருத்தல் வேண்டுமெனத் தெரிகிறது. அருணகிரிநாதர் கீதம் வாத்யம் நிருத்தம் போன்ற மரபினை அறிந்த மாமேதையெனவும் கூறமுடிகிறது.

இவருக்குப் பின்புதான் ஸ்ரீமான் முத்துத் தாண்டவர் என்பவர் இரண்டாவது சப்தம் இயற்றிய ஆசிரியராக விளங்குகிறார். முத்துத்தாண்டவர் விஜயராகவ மன்னர் காலத்தில் வாழ்ந்தவர் எனச் சிலர் கூறுவர். முத்துத்தாண்டவர் பதங்களில் வரும் சப்தக் கோர்வைகள் பின்வருமாறு:

தாளக்கீர்த்தனம் – இராகம் தோடி சாபு தாளம்

தேடிய மாலயன் காணாத பாதர் -
தில்லை மூவாயிரவர் கண்டவதீத
தாடொழுவார்க் கருணலகும் பிரக்கியா தர்தம்
பரமான சிதம்பரநாதர்

தாகு ஜேகிண ஜேகிணங்கிட ததிங்கத்தோம் திரிகிட - ததிங்கத்தோம் திரிகிட ததிங்கத்தோம். 1

தாகு ஜேகிண ஜே கிணங்கிட ததிங்கத்தோம் திரிகிட - ததிங்கத்தோம் திரிகிட ததிங்கத்தோம் கிடத. 2

ததிங்கத்தோம் கிடத தத்திமி தித்திமி தெய்தெய் - ததிங்கத்தோம் கிடத தத்திமி தித்திமி தெய்தெய். 3

தாம் தகுந்தரி தரிகு திருகு தரிகுஜேம்தரி - தாம் தகுந்தரி தரிகு திரிகுகு தரிகுஜேம்தரி. 4

தந்த திந்தந் தந்தணந் தணந்திமி - தந்ததிந்தந் தந்தனந் தணந்திமி. 5

சிதம்பரம் ஸ்ரீசபாநாதர் பேரில் முத்துத் தாண்டவர் பாடியருளிய கீர்த்தனம் - பதம். முத்துசாமி முதலியார் அவர்களது ஔவைத் தமிழ் விளக்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. பிரபவ ஞு சித்திரை மீ.

தந்த திந்திமி தக்கிட ததிக்கிடததக
தந்த திந்திமி தக்கிட ததிக்கிடததக

தத்தடிங்கு தடிங்கு டிங்குகு - ததணத ஜெனுத - தத ணத ஜெனுத - தத்ததிங்கிணதோம் - ததிங்கிணதோம் - ததிங்கிணதோமென (ஆடிய வேடிக்கை) அ. ப. ||

அதிரும்வாணன் குடமுழவோசை திசைமுட்ட
வநதர துந்துபி நாதமகில மெல்லா மெட்ட
சதுர்முக நிசைக் கொத்தங்கருகிற்றாளந்தட்ட
சதியறிந்தயன்ர கைத்தூக்கி மத்தளங்கொட்ட

தாகுஜேகிண ஜேகிணங்கிட ததிங்கத்தோம் திரிகிட - ததிங்கத்தோம் திரிகிட ததிங்கத்தோம் - தாகுஜேகிண ஜேகிணங்கிட ததிங்கத்தோம் திரிகிட - ததிங்கத் தோம் திரிகிட
ததிங்கத்தோம் கிடத - ததிங்கத்தோம் கிடத தத்திமி தித்திமி
தெய்தெய் ததிங்கத்தோம் கிடத தத்திமிதித்திமி தெய்தெய்-
தாம் தகுந்தரி தரிகுதிரிகுகு தரிகுஜேம்தரி - தாம் தகுந்தரி
தரிகுதிரிகுகு தரிகுஜேம்தரி - தந்ததிந்தந் தந்தணந் தணந்திமி
தந்ததிந்தந் தந்தணந் தணந்திமி - தந்ததித்திமி தக்கிடததிக்கிடத
தக தந்த திந்திமி தக்கிடத திக்கிடத தக - தத்தடிங்கு தடிங்கு
டிங்குகு - ததணத ஜெனுத - ததணதஜெனுத - தத்ததிங்கணத்தோம்
ததிங்கிமத்தோம் ததிங்கிணத்தோமென (ஆடியவேடிக்கை)

முத்துத்தாண்டவர் காலத்திய நாயக்க மன்னர்கள் பெருவாரியாக இவ்விதமான ஜதிகளை உபயோகப் படுத்தினர் எனத் தெரிகிறது. விஜயரங்க சொக்கநாத நாயக்கர்

காலத்தில் [1]திருமலைக்கவி இயற்றிய சித்திரக்கூட மான்மியம் என்னும் நாட்டிய நாடகம் சிதம்பரத்தில் நடந்துள்ளது. அதிலும் ஜக்கினி தருக்கள், சலாம் தரு வகைகள் அந்நாடகத்தில் ஆடப்பட்டதென இங்கு நினைவு கூறுதல் வேண்டும். பொதுவில் தென்னகத்தில் இக்கால கட்டத்தில் இவ்விதமான தருக்கள் மிகவும் பிரபலமாக இருந்ததெனவும் தெரிகிறது.

[2]**நந்தீசுவர பரதம்** என்னும் கட்டுரையில் பரமேச்வரன் ஆடிய நாட்டிய சப்தங்களும் விசாரங்களும் என்பதனைப் பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளது. சல்யக நாட்டியம், சசக நாட்டியம், சிக்ரோட நாட்டியம் மண்டுக நாட்டியம், ப்ரமர கீடக நாட்டியம், தித்திரிபக்ஷி நாட்டியம், மஹோததி நாட்டியம் என்றும் நாட்டியகெதிகளின் உதாரணங்கள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன.

ஆதி தாளம் - சல்யக சப்தம் :

ஜேஹம் தஜ்ஜகணம் + ஜம்தஜ்ஜணம் + ஜகணம் தகணம்தக ஜம்த ஜகண தகணம் + தாம்தஜகணம் தோம் ததிகிணம் என வராககெதி நடைவரும்.

ஆதி தாளம் - சசக சப்தம் :

தின்னாகெதி - தின்னாககெதி திமிதக்கிடதரிதாம் தக்கா திமித திமிததிமி - ததிமிகிடதக (இரண்டு தடவைகளாகும்) என முயல்கெதி நடைவரும்.

ஆதிதாளம் இரண்டாம் காலம் - சிக்ரோட சப்தம் :

தஜம்ஜம் ததிக்கிணம் தாதிகிதாதா + ஜம்த ஜம்த திக்கிணம்தா திகிதாதா என அணில்கெதி நடைவரும்.

---

1. சித்திரக்கூட தான்மியம் என்னும் தில்லை கோவிந்தராஜ நாடகம். D. 520 - M. 671.

2. மட்டுநூரு - ஸூர்யநாராயண சாஸ்திரி அவர்களின் தொடர்ச்சிக் கட்டுரை நாட்டிய களா - பக்கம் 50 - 57 எண். 5, வால்யூம் 10, அக்டோபர், 1970.

மிச்ரஜாதி சாபுதாளம் – மண்டூக சப்தம்

தக்கிணங்கிண - தரிதஜம்தரி - தாகஜனகிட - குகுந்த ததிகுகு - தக்குதிங்குகு - தணததண தண திமித திமிதிமி என தவளைகெதி நடைவரும்.

அட தாளம் நான்காம் காலம் **ப்ரமரகீட சப்தம்**

ஜே ஏ ஏ - ஏ ஏ ஏ ஏ - ஏ ஏ ஏ ஏ - ஏம் தாரி = தா அ அ அம் தா + ணா - ததீஈம் + திமிதா அ + தகுந்தாரி - தணா + கிணா - ஜேனுத என வண்டின கெதி நடைவரும்.

ஸங்கீர்ணஜாதி – த்ரிபுடை தாளம் – தித்திரிபக்ஷி சப்தம்

தஜம் தகஜம் தகஜம் தஜம் தஜம் தகஜம் - தரிஜம் தரிஜம் தஜம் தகஜம் தகஜம் தஜம் தரிஜம் என குயிலின கெதி நடைவரும்.

ஆதி தாளம் – மஹோததி நாட்டிய சப்தம்

தாம்த + ரிதணதகிணம் தரிதஜேம்த . . . கதிணதரி ஜம்த திமிதோம்த எனதரங்க நடைவரும்.

இவ்விதமாக எத்தனையோ சப்த விசாரங்கள் செய்துள்ளார்கள் நம் முன்னோர்கள். அத்துணையும் கிடைப்பதல்லவோ அரிதாகவுள்ளது. ஜதிகள் பலரிடம் இன்னமும் புதைந்து கிடக்கின்றன. அந்தச் சப்தங்களில் பல அற்புத பாணிகள் தென்படுகின்றன. அதை அனைத்தும் ஒன்று சேர்க்க அறிஞர்கள் கலைஞர்கள் தக்த முயற்சிகள் எடுத்துக்கொண்டு அதனை இக்கலைக்கு பயனளிக்கச் செய்தல் வேண்டும்.

முன்னோடியாகத் திகழ்ந்த சப்தம் இயற்றிய ஆசிரியர்கள். தமது படைப்புக்களை க்ஷேத்திர கிருதிகளாகவே அமைத்துக் காட்டியிருத்தல்ண்டும். அவ்விதமே சகசி மகராசன், காசிநாதகவி, நாரணகவி போன்றவரும் க்ஷேத்திர கிருதி சப்தங்களாகவே அமைந்துள்ள

விதம் இங்கு எண்ணத்தக்கது. காசிநாதகவி, நாரணகவி போன்றவர் சில வேளைகளில் மன்னவர்கள் மீதும் சப்தங்கள் சொல்லியுள்ளார்களெனவும் தெரிகிறது.

கூச்சிப்புடி பாகவதமேளாவில் மண்டூக சப்தம் இன்றும் சொல்லப்படுகிறது. கூச்சிப்புடி பாகவதர்கள் தஞ்சை சப்தங்களை உபயோகப்படுத்துகின்றனர். மெலட்டூர். சாலியமங்கலம் போன்ற ஊர்களில் நடக்கும் பாகவத மேளாக்களிலும், பிரகல்லாத சப்தம் நரசிம்மர் சப்தங்கள் சொல்லப்படுகிறது. விஜயராகவ மன்னர் காலத்திய பிரகல்லாத நாடகத்திலும் சப்தம் சொல்லும் பழக்கமிருந்ததென நாடகத்தின் குறிப்புக் கூறுகிறது.

நாட்டிய நாடகங்களில் சப்தம் சொல்லும் முறை கதையில் வரும் பாத்திர விசேடத்திற்கு தகுந்தாற்போல் அமையும். நாயிகை நாயகன் முக்கிய புராணபுருஷர்கள் போன்ற பிரதான வேடங்கள் நடிக்கப்படும்பொழுது சப்த ஜாலக் கோர்வைகள் சொல்லப்படும்பொழுது அதிக அளவிலிருக்கும் சாதாரண வேடங்கள் நடிக்கப்படும் பொழுது மிதமான சப்தங்கள் கையாளப்படும்.

நாடகத்தில் வரும் துருவா பிரவேசம் கடைசிப் பகுதியில் சப்தம் சொல்வதை காணலாம். பாத்திர பிரவேசத்தின் ஆரம்பக் கட்டத்திலும் சப்தம் சொல்லும் பழக்கம் இருந்திருத்தல் வேண்டுமென தோன்றுகிறது. நாட்டியத்தில் குறைவாகவோ மிதமாகவோ சப்தங்கள் சொல்லப்படுவது நாட்டிய ஆசிரியரின் திரனாகும்.

ஜக்கிணி தருக்கள், சலாம் தருக்கள், கைவார கீதங்கள் என்பன பழைய சங்கீத முறையெனக் கூறுவர். சலாம் தருக்கள் தோன்றுவதற்கு முன்பாகவே கைவார கீதங்கள் தோன்றின. அதன் பிறகு ஜக்கிணி தருக்களும் சலாம் தருக்களும் தோன்றின என்பர். பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே ஜக்கிணி தருக்கள் தோன்றின எனவும் கூறுவாரும் உளர்.

தேசீ நாட்டியத்தில் ஜக்கிணி தருவின் உபயோகம் அதிகம் எனவும் கூறலாம். ஜக்கிணி நாட்டியத்தைப் பற்றி தாளதீபிகை என்னும் நூலில் இவ்வாறு குறிக்கப்பட்டுள்ளது.

விசித்திர நாட்டிய மரபு

குண்டலீ போகவத்யாந்து கல்பிதா மாடகர்ணிகா
அயோத்யாம் கிருதம் பூர்வம் பேரணிர் வாயுஸுநுனா 10

கூர்ஜரி த்வாரவத்யாந்து திதஸேன ப்ரகல்பிதம்
காளிகாயா: கிருதம் பூர்வம் மதங்கேதைவ ஜக்கிணி 11

ஜக்கிணி என்னும் தேசீய நாட்டிய வகைப் பற்றி மதங்கர் தனது பிருகத்தேசி என்னும் நூலில் குறிப்பிடுகிறார். ஜக்கிணி என்ற நாட்டியம் மதங்கர் காலத்துக்கும் முன்பிருந்தே மக்களிடம் செல்வாக்கைப் பெற்றும், நாட்டியம் ஆடப்பட்டும் இருந்தது என்று கருத இடமுள்ளது. தாளதீபிகையில் கண்ட மற்ற சித்திர நாட்டிய மரபினையும் கவனிக்கத்தக்கது.

சம்புநா தண்டலதிகா கல்பிதா தாண்டவோத்ஸவே
அப்ஸபிப்யாம் க்ருதம் பூர்வம் குருணா ச்யாமளா ததா 12

ப்ரேங்கணீ யக்ஷராஜேன அகஸத்யேனது டக்கிணீ
சாரீணி நைருதீனாஞ்சைவ பஹுசாரீஷு சக்தினா 13

ஜக்கிணி லக்ஷணம் (லாஸ்ய நாட்டியம்)

புரா தேவீ மகாகாளீ லாஸிதும் சம்புநா ஸஹ
ஜனகம் ப்ரேக்ஷ்ய பப்ரச்ச மதங்கம் தீப்ததேஜஸம் 14

கேநோபாயேன பகவன் மோஹதும் சங்கரம் மம
ஆதி சர்வ மஹாபாக ரஹஸ்யம் த்வம் அஸ்ய துரலபம் 15

ச்ருணு லக்ஷ்யாமி கல்யாணி லாஸ்யம் புவன மோஹனம்
குண்டலீ கூர்ஜரீ சைவ ஜக்கிணி த்ரிதா பவேத் 16

புஜ ப்ரகோஷ்டௌ ஜகனௌ பார்ச்வ ஜங்கௌ த்ருசா ததா
கடகாமுக ஹஸ்தஞ்ச குஞ்சிதஞ்ச யதா க்ரமம் 17

ஜக்கிணி பற்றி குறிப்புரை:

இந்த சம்பிரதாயத்தை கேளம்மா பார்வதி ! புஜங்களும், மணிகட்டுகளும், ஜகன பாகங்களும், பார்ச்வ பாகங்களும், முழங்கால்களும், த்ருஷ்டியும், முழங்கைகளும், கடகாமுக ஹஸ்தங்களும், குஞ்சிதபாதமும், வகையாக இருத்தல் வேண்டும்.

ஊரு பார்ச்வ ஸமாயோகே அர்த்சந்திராக்ருதிர் பவேத்
வக்த்ராண்யத்ர ப்ரசம்தே தசதா ஸவ்யயோ மய: 18

குறிப்புரை : *தொடைகளுடன் தொடை சேரும் பொழுது பாதி சந்திரன் போல் இருத்தல் வேண்டும். பாதி சந்திரன் வளைக்கும் விதங்கள் பத்து விதங்களாகும். இடது, வலது பக்கங்களில் வளைப்புகள் பத்து விதமாக வரும்.*

வ்யத்யஸ்த ஸமபாதெள ச குஞ்சிதம் வலயம் ததா
அக்ரே ஜான்வெள குஞ்சிதஞ்ச சஸ்சாஜ்ஜானுக மேலச 19

குறிப்புரை : *சாரீவரும் விதமெப்படி என்றால், வித்யாச பாதமும், சமபாதமும், குஞ்சிதபாதமும், வீசுகின்ற தன்மையுடையவனவும், முன்னுருந்து முன்பிலுள்ள சாரிகள் வருதல் வேண்டும்.*

தேன்னக பாடா தாலெளச ஸ்வரம்ஸ்ச பிருது பதம்
ஆயுதா: த்ருக்பதா ந்யாஸம் அவதானா: ப்ரகீர்திதா: 20

குறிப்புரை : *தாளமும், பாடாக்ஷரங்களும், தாள சுரங்களும், விருது பாடலும், ஆயுதமும், பார்வையும் முதலான எட்டுவிதமெனப்படும்.*

சாமகா சாம பல்லஞ்ச கட்க கேடக டிண்டிமா:
டோலீ சக்ர கதாசைவ ப்ரோக்தா நவவிதாயுதா:

குறிப்புரை : ***குச்சமும், பாணமும், சூலமும், கத்தியும், காமபாணமும், டக்காவும், சக்ரவாத்தியமும், சக்ராயுதமும், கதையும் இந்த ஆயுதங்கள், வாத்யங்கள் முதலானவை நவரஸ ஜக்கிணி லக்ஷணமெனச் சொல்லப்படும். பஞ்சரத்ன ஜக்கிணி ஐந்து விதமான ஆயுதங்களெனப்படும்.***

ஜக்கிணி நாட்டியத்தைப்பற்றி *தமிழ் நூலில் :

1. ஆரியக் கூத்துத் துலுக்கு துலுக்கச்சி அங்கதற்பின்
சீரிய தாகுந் தரவேசி சக்கணி சேர்ந்த நிலை
பேரியல் தானஞ் சதி சிந்து ராகம் பிறகு மண்டி கூரிய
ஆயுதம் முன்னோர் சொல் நூல் வழி கூருவமே.

2. கூறுமயக்கப் பெண்கூத் தாகுஞ்சக்கணி கொள்ளுநிலை
வீறிய தாகும் வைணவ மண்டலம் மேறப் பெண்பெரு
மறாலி அடதாளஞ் சிந்து பெறு மெலிலாம்
வா நிருகை கட்கார் முகமாக கலந்தனரே.

3. வகுத்துச் சொல்லாயுதங் குஞ்சந் தடிதப்பு வண்சிறகு
மிகுந்த சிங்காடி போந்தகைக் கோப்பரிசையும்
வெட்டுகைவாள்
பகுத்திடு நேர்சங் கடற்சமுதாடு படைக்கலமாய்க்
தொகுத்து நவின்றனர் முன் பரதாகமஞ் சொல்பவரே.

தஞ்சையில் தில்லானாக்கள் தோன்றுவதற்கு முன்பு ஜக்கிணி நாட்டியமே நாட்டியக் கச்சேரியின் கடைசிப் பகுதியில் உபயோகப்பட்டது. ஜக்கிணி தருக்கள் மறைந்து அதற்குப்பதிலாக தில்லானாக்கள் பிற்காலத்தில் நாட்டியத்தின் கடைசி நிகழ்ச்சியாகவும் இடம் பெற்றுள்ளது. பதினாராம் நூற்றாண்டு முதல் பதினெட்டாம் நூற்றூண்டு வரையில் ஜக்கிணி தருக்கள், சலாம் தருக்களின் உபயோகம் தஞ்சை நாட்டிய நாடகங்களில் அதிகமாக இடம்பெற்றன.

மார்க்க நிருத்தத்தில் தோன்றியதே கௌத்துவம் என்னும் சம்பிரதாயம், தேசீவகை நாட்டியத்தில் தோன்றியதே ஜக்கிணி தருவாகும். இன்றும் கௌத்துவங்கள் பல கிடைக்கின்றன. தேசீ வகையில் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றிய ஜக்கிணி தருக்களும், சலாம் தருக்களும் கிடைப்பது

---

1. சரசுவதி மகால் தமிழ்ச்சுவடி எண். 621, 638 பக்கம் 519.

அரிதாகும். கௌத்துவம், ஜக்கிணி தரு. சலாம் தரு என்னும் இம்மூன்று வகைகளிலும் சப்தக் கோர்வைகள் வரும்.

பதினேழாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் தஞ்சையை ஆட்சி செய்தவர் சாஹஜி என்னும் சகசி மன்னர் (1984 முதல் 1710) நாயக்க மன்னர்களின் வழிமுறையினை பின்பற்றி பரதக்கலையின் வளர்ச்சிக்காக பாடுபட்டார். கௌத்துவம், துருபதம், அபிநயபதம், சலாம் தரு, ஜக்கிணி தருக்கள் போன்றவை பல விசித்திர நாட்டிய உருப்படிகளை தாமே சுயமாக தமது முத்திரை யுடன் இயற்றியுள்ளார்.

சகசி மன்னரால் கௌரவிக்கப்பட்ட விருதுடைய பெண்கள் பஞ்ரத்தின பிரபந்தமென்னும் நாட்டிய நாடகத்தில் பங்கேற்று பரதநாட்டியக் கச்சேரி செய்தனர். என பிரபந்த நூலில் சான்று கிடைக்கின்றன. இந்நாடகத்தில் கௌத்துவம், சலாம் தரு, அபிநயபதம், ஜக்கிணி தரு போன்ற உருப்படிகள் இடம் பெற்றுள்ளன. இதே போல் தியாகராஜ **“விநோத சித்ர பிரபந்தம்”** எனும் நூலிற் மேற்கண்ட உருப்படிகள் இடம்பெற்றுள்ளன. இந்நூலில் இவ்விரு நாட்டிய நாடகங்களில் கிடைத்துள்ள கௌத்துவம், சலாம் தரு, ஜக்கிணி தருக்கள் போன்ற உருப்படிகள் இந்நூலில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

சகசி மன்னரைப்பற்றிய பாடல் :

*கண்ட மேரு நஷ்டோத்திஷ்ட கடன லரஸி
கான மொனரிஞ்சு வாக்கேயகார ததிகி
வைகருலு தித்து ஸத்குரு ஸ்வாமி நீவு
ஸாஹதீதாம ஸாஹேந்தர ஸார்வ பௌமா. 1

---

*B. 10305 - ஸாஹராஜுமீதிபத்யமுலு.

ஐது ஜாதுல மேருவு லரஸி யெத்தி
குரு லகு க்ஷிது லெரிகி யாசரித கண்ட
மேருவகு மீகு நொக ஜாதி மேரு வரஸி
யெத்தின மஹா நடுடு சாஹேந்த்ர யெனயே. 2

சகசி மன்னர் ராஜகவியாக திகழ்ந்தும் மற்ற அரசவைப் புலவர்களையும் ஆதரித்தவர். இம்மன்னரை பாட்டுடைத் தலைவராக வைத்து பலமொழி சாகித்யங்களும், இசை நாட்டிய நாடகங்களும் பல புலவர்களால் இயற்றப்பட்டன. இம்மன்னரும் தமிழ், தெலுங்கு, வடமொழி, மராட்டி, வ்ரஜை மொழிகளில் இசை நாட்டிய நாடகங்களை இயற்றியுள்ளார்.

மராட்டி, தெலுங்கு மொழிகளில் ஏராளமான பத சாகித்யங்கள் இயற்றியுள்ளார். இம்மன்னர் சப்தம் எனும் சொற்கட்டுகள் இயற்றுவதில் கைதேர்ந்தவர். இவரது காலத்தில் தோன்றிய பரத தொகுப்பு நூல்களில் தமிழகத்தின் பல பாரம்பர்ய மரபுகளும் புதைந்து கிடக்கின்றன எனில் அது மிகையாகாது. இந்நூலில் அகமார்க்கம் என்னும் தலைப்பில் பதிப்பான விஷயமே அச்செய்தியினை சுட்டிக்காட்டுகிறது. தெய்வவசமாக இச்செய்தியும் இந்நூலில் பதிப்பானதற்கு மிகவும் மகிழ்வடைகிறேன்.

சகசி மன்னர் காலத்தில் தமிழிசையும், கர்னாடக இசையும் நன்கு வளர்ந்தன. தேவாரம், திருப்புகழ் திருவாய்மொழி, கீதகோவிந்தம், புரந்தரரின் பதங்கள், பிராசீன சம்பிரதாய சூளாதிகள், கீதங்கள் முதலிய மரபுகள் போற்றப்பட்டன. இம்மன்னர் இயற்றிய **இராமாயண சூளாதி பிரபந்தம்** அச்சாகியுள்ளது. இக்கிருதி ராகமாலிகையகவும், தாளமாலிகையாகவும், சொற்கட்டு பிரபந்தமாகவும் தோற்றமளிக்கிறது.

---

* Vol. 34 No. 1, & 3 Journal of the Thanjavur Sarasvati Mahal Library, 1984.

இம்மன்னர் இயற்றிய சப்தங்கள் என்னும் சொற்கட்டுகள், இந்நூலில் வெளியிட்டுள்ள சலாம் தருக்கள், ஜக்கிணி தருக்கள் மூலம் கம்டுகொள்க. (பக்கம் 25 முதல் 77 வரையில்) இம்மன்னர் காலத்தில் வாழ்ந்தவர் பரதம் காசிநாதகவி என்பவர் ஆவார். இப்புலவர் தமது சப்தங்களை க்ஷேத்ரகிருதிகளாகவே அமைத்துள்ளார்.

விநாயகன், முருகன், வெங்கடரமணன், மகாலக்ஷ்மி, தஞ்சையீசர், ஆனந்தவல்லி, லக்ஷ்மீநாராயணன், சிதம்பரேசன், வைத்தியநாதன் தியாகராஜா, இராமர், கண்ணன் போன்ற தெய்வங்களின் பேரில் காசிநாதகவி என்பவர் சப்தங்கள் சொல்லியுள்ளார். சப்தங்களில் வரும் முத்திரைகள் பின்வருமாறு - காசிநாதநுத, வரகாசிநாத, வேதகாசிநாத, நடனகாசிநாத, நிருத்த காசிநாத எனவிருக்கும்.

பரதம் காசிநாதன் என்னும் கவிஞர் வாழ்ந்த காலம் 1704 முதல் 1730 A. D. ஆகும். இக்கவிஞர் இரண்டாம் சகசி மன்னர், முதல் சரபோஜி மன்னர் இவர்கள் பேரிலும் சப்தங்கள் கூறியுள்ளார். காசிநாதகவி என்பவர் ஜதிகட்டு என்கிற சொற்கட்டு சொல்வதில் கைதேர்ந்தவரென்றும், சொற்கட்டுக் கோர்வைகள் எவ்விதமாக சிருட்டிக்கலாம் எனவும் இந்நூலில் பக்கம் 150 - 151ல் கூறியுள்ளதை கவனிக்கத்தக்கது.

ஜதிக்கட்டு என்பது ஐந்து ஜாதி பேதங்களிலிருக்கும் என்றும் அதனில் அதீதம், அனாகதம், விஷம், சமமாக அமைக்கலாமென்றும், அனுத்ருத, த்ருத, லகு, குரு, புலு தங்களும், தக்க இடத்தில் காகபதங்களும் பாடாக்ஷரங்களாக வைத்து அமைக்கலாமெனக் கூறப்பட்டுள்ளது.

பேரணி, ஸுளாதி வகையான ஸலாம் தரு முதலிய மார்க்கவழியினை பின்பற்றியதே இந்த சொற்கட்டென்றும், ரூபகக் கலைக்கு மிகவும் பிரகாசமாக கையாளப்படுவதென்றும் தெரிகிறது. இத்துடன் நிற்காமல்

ஜக்கிணி தருக்களின் பல வண்ணங்களும் இவ்விதமான சப்தங்களில் இருக்குமென தெரிந்துகொள்ள முடிகிறது.

தஞ்சை மண்டலத்தில் காசிநாதனுக்குப் பிறகு இராமநாதன் மற்றும் அவரது உடன்பிறப்பு பஞ்சநதி வைத்தியநாதன் போன்றவர் சப்தங்கள் கூறியிருக்கவேண்டு மெனவும் தோன்றுகிறது. (சாலியமங்கலம் பஞ்சநாத பாகவதரின் சப்தம் நினைவு கூறுதல் வேண்டும்.) இவர்கள் பரதம் காசிநாத கவியின் சீடர்கள் எனவும் தெரிகிறது. மெலட்டூர் சாலியமங்கலம் போன்ற பாகவத மேளாவில் உள்ள சப்தங்கள் இங்கு நினைவு கூறுதல் வேண்டும்.

காசிநாதன், இராமநாதன், பஞ்சநத வைத்தியநாதன், வெங்கடராம சாஸ்திரிகள் போன்ற வழித்தோன்றலே பரத நாரணகவி என்பவரும் ஆவர். இக்கவிஞரும் காசிநாத கவியின் சப்தங்களைக் கற்றுணர்ந்தவராக இருத்தல் வேண்டுமெனெத் தெரிகிறது.

காசிநாதரின் சப்தங்கள் பெரும்பாலும் ஆதிதாள சப்தங்களாகவே இடம்பெற்றுள்ளன. சிற்சிலவிடங்களில் அடதாள சப்தங்கள் இடம்பெற்றுள்ளன. இக்கவிஞர் இயற்றிய **இராமர் சப்தம்** குறிப்பிடத்தக்கது. பரதம் காசிநாதர் தஞ்சை மெலட்டூர் வாசி ஆவார். தெலுங்கு, தமிழ், வடமொழிகள் தெரிந்தவராக அறியமுடிகிறது.

பரதம் நாரணகவி என்பவரும் தஞ்சை மெலட்டூர் வாசியாகவே தென்படுகிறார். சப்தங்கள் இயற்றுவதில் கைதேர்ந்தவரென விளங்குகிறது. தஞ்சையில் வீற்றிருக்கும் தெய்வங்களான பெருவுடையார், பிருஹன்னாயகி, கொங்கணேசர், கலியுக வெங்கடேசர், மீனாக்ஷீசுந்தரேசர், நவநீதகிருஷ்ணன், கோதண்டராமர் போன்ற மூர்த்திகளின் பேரில் சப்தங்கள் கூறியுள்ளார்.

வெண்ணாற்றங்கரையில் வீற்றிருக்கும் தெய்வங்களான தஞ்சேசன், ஆனந்தவல்லி, நீலமேகசுவாமி, லக்ஷ்மீநரசிம்மர் போன்ற மூர்த்திகளின் பேரிலும் நாரணகவியின் சப்தங்கள்

கிடைக்கின்றன. பிரதாபசிம்மன் - இரண்டாம் துளஜா ராஜாக்கள் காலத்தில் (1939 - 1787 A. D.) பரதம் நாரணகவி வாழ்ந்தவராவார். பிரதாபராமர் என்னும் ராமசந்திரமூர்த்தி, பிரதாபசிம்மன் காலத்தில் முக்கிய ஆராதனை தெய்வமாகும். நாரணகவி இயற்றிய பிரதாமராமர் சப்தம் குறிப்பிடத்தக்கது.

நாரணகவியின் சப்தங்கள் ஆதிதாளம், அடதாளம், ஜம்பை தாளம், த்ரிபுடதாளம் முதலிய தாளங்களில் கிடைக்கின்றன. இரண்டாம் சரபோஜி மன்னன் (1798 - 1832 A. D.) காலத்திலும் அனாம கவிகள் சப்தங்கள் கூறியுள்ளார்கள். முத்திரைகள் இல்லை. இம்மன்னரின் சம காலத்தில்தான் சின்னையா, பொன்னையா, சிவாநந்தம் வடிவேலு என்னும் வித்வான்கள் நால்வர் சொறக்கட்டுகள் சொல்லியுள்ளார்கள் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமாகும்.

சப்தம் என்னும் சொற்கட்டைப் பற்றி எனக்குத் தெரிந்த சில வார்த்தைகள் கூறியுள்ளேன். எல்லாம்வல்ல நடராஜப்பெருமான வணங்கி என் முகவுரையை முடித்துக்கொள்கிறேன். பதிப்பித்துள்ள இந்நூலுக்கு ஆதாரமாக உள்ள சுவடிகள்: B. 11609, B. 11521, M. 685, M. 572, B. 11523, B. 11542 என்னும் சுவடிகளின் எண்களாகும். இந்தச் சுவடிகள் யாவும் தெலுங்கு லிபியில் எழுதப்பட்டதாகும். தமிழ் - தேவநாகரி எழுத்துக்களில் இணைந்து பதிப்பிக்கப்பட்டிருப்பதால் பல மொழி வாசகர்கள் பயன்பெறுவார்கள் என நம்புகிறேன். இசை உலகிற்கு எனது நீண்டநாள் ஆர்வத்தின் காரணமாக இந்நூலை வெளியிட்டுள்ளேன். இந்நூலின் கண் தெரிவித்துள்ள செய்திகள் யாவருக்கும் வியப்பாகத் தோன்றலாம். இதுவரை கிடைத்துள்ள ஆதாரங்களை வைத்துக் காணும்போது அடியேனுடைய கூற்றையும் இக்கலையில் ஆர்வமுள்ள அபிமானிகள் என் கருத்தினை ஏற்றுக்கொள்வாரென நம்புகிறேன்.

ஜதிகளைப்பற்றி ஆராய்பவர்கள் தங்கள் கருத்துக் களையும் தெரிவித்தால் நன்றியுடன் ஏற்றுக்கொண்டு இனிவரும் பதிப்புகளில் அச்செய்தியினை இணைத்து வெளியிடவும் வசதியாக இருக்கும்.

இந்நூலை பதிப்பிப்பதற்கு எனக்கு ஆணையிட்ட இந்நூலக இயக்குநரும், மாவட்ட ஆட்சியாளருமான உயர்திரு T. R. இராமசாமி, I. A. S., அவர்கட்கு என் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் அச்சிட அனைத்து உதவிகளையும் வழங்கிய சரஸ்வதி மகால் நூல் நிலைய நிர்வாக அதிகாரி (பொறுப்பு) திரு. அ. பஞ்சநாதன், எம். ஏ., பி. லிப். சி., அவர்கட்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என் உடன் பணிபுரியும், மராத்தி பண்டிதர் திரு. T. R. பீமராவ் அவர்கள் அவ்வப்போது நூலைப் பதிப்பிக்கும் பணியில் எனக்கு ஊக்கம் கொடுத்ததற்கு என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

இந்நூல் விரைவில் நல்லமுறையில் அச்சிட்டுத் தந்த நூலக அச்சகத்தார்க்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நா. விசுவநாதன்

பொருளடக்கம்

பக்க எண்

1. பரதம் காசிநாத கவியின் சப்தங்கள் :

கணேசன், விநாயகன், முருகன்	2
இரங்கநாதன், வெங்கடரமணன்	3
மகாலட்சுமி	4
லட்சுமீநாராயணன், நரசிம்மன்	5
தஞ்சேசன் - வந்ஹிவநேசன் ஆனந்தவல்லி, தட்சிணாமூர்த்தி	6
இந்துசேகரன்	6-7
சந்திரசேகரன் வேதவநேசன்	8
சிதம்பரேசன், துர்க்கை	9
பரளி வைத்யநாதன் கமலாபுரிவாசன்	9-10
முத்துக்குமாரன் - சித்தாம்ருததீர்த்தம்	10
இராமர் பேரில் அடதாள சப்தம்	11-14
தஞ்சாபுரீசன் - காவேரி ரங்கநாதன்	15
தியாகேசன் பேரில் தமிழ் சப்தம் மற்றும் தியாகவிநோதன்	16
சகசி ராஜன் பேரில் அடதாளம் சப்தம் தமிழ், தெலுங்கு	17
சகசிராஜன் பேரில் அடதாள சப்தம்	19

	பக்க எண்
முதல் சரபோஜி பேரில் சப்தம்	20
ஜயந்தகவி இயற்றிய சரபோஜியின் சப்தம்	24

2. ஸாஹஜி மகாராசன் இயற்றிய ஸலாம் தருக்கள் முதலியன:

முத்துக்குமரன்	25-26
விநாயகன்	27
ஆனந்தவல்லி	28
கனகசபை, நடேசன் - சிதம்பரம்	29
திரிபுவன ஈசன்	30
பஞ்சநதீசன் - திருவையாறு	31
மஹிஷாஸுரமர்தினி	32
காசி விச்வேச்சுவரன்	33
இந்திரன் - திருவாரூர்	34-35
தியாகேசன்	36
ஸ்ரீராஜகோபாலன் - மன்னார்குடி	37
வேதவநேசன்	38
சுந்தரேசன் - மதுரை	39
கோதண்டராமர்	40-41
ஸ்ரீரங்கநாதன்	42
அருணாசலேசன் - திருவண்ணாமலை	43
வெங்கடேசன், சேஷாத்ரி	44
இராமலிங்கர் - இராமேச்வரம்	45
அர்த்தநாரீச்வரன்	46-47
கும்பேசர் - கும்பகோணம்	48

		பக்க எண்
	வைத்தியநாதன் - வைத்தீச்வரம்	49
	சம்புமகாதேவர் - சகசியின் குலதெய்வம்	50
	இலட்சுமிநரசிம்மன்	51
	பத்மநாபர் - பத்மாலயம்	51-53
	காளத்திலிங்கர் - காளஹஸ்தி	54
	ஏகாம்பரேசர் (சிவகஞ்சி)	55
	வன்மீகேசர் - திருவாரூர்	56
	திரயம்பகேசர் - நாசிக்	57
	தியாகராஜவிநோத சித்ரபிரபந்தம் - சலாம் தருக்கள்	58
	பஞ்சரத்தின பிரபந்தம் - கணபதி கௌத்துவம் நிலைகட்டணம், ஜதி, சொற்கட்டுகள்	61-63
	தியாகராஜ விநோத சித்ரபிரபந்தம்- ஜக்கிணி தருக்கள், ஐந்து தருக்கள்	64-76
3.	ஆதிபரதத்தில் காணும் சொற்கட்டு	77
	விஜயராகவன் பேரில் தரு சொற்கட்டு-	78
	விநாயகன் தாலம்	79
	சிம்மநந்தன தாலச்சொல்லும் - தருவும்	82-87
	தாளலட்சண நூலும், அகமார்க்கம் - புஷ்பாஞ்சலி - சொற்கட்டுகளும் - கணபதிகௌத்துவம்	88
	சாதுர்லக்ஷ்ம் கிருஷ்ணமாச்சாரியாரின் கீதபிரபந்தம்	90

பக்க எண்

4. பரதம் நாரணகவியின் சப்தங்கள்

ஆனந்தவல்லி - தஞ்சேசர்	91
நீலமேகசாமி, கைலாசநாதர், நரசிம்மர்	93-94
கோதண்டராமர், ஜனார்தனர், தஞ்சை கிருஷ்ணன்	94-95
பிருஹதீசன், பிருஹன்னாயகி	96
கரிகிரி வரதன், கொங்கணேசர்	96-97
முத்துக்குமரன், தியாகேசர், ராஜகோபாலர்	98
கலியுகவெங்கடேசர் - தஞ்சை	99-100
பஞ்சநதீசர் - சுந்தரேசர் மீனாக்ஷி - தஞ்சை, தியாகராஜர்	101-103
நீலாயதாட்சி - நாகப்பட்டினம்	104
குமாரசுவாமி, சட்டநாதர்	105 - 106
தியாகராஜர் - நாகப்பட்டினம், கண்ணன், சௌந்தரராஜர்	107
தஞ்சேசர் - வெண்ணாற்றங்கரை அடதாள சப்தம்	109
வெங்கடேச்வரர், ஸ்ரீமீனாக்ஷி - தஞ்சை ஜம்பை தாள சப்தம்	111
ராமர், கோபாலன் - மட்டியதாள சப்தம்	112
கோபாலர், விச்வநாதர் - தஞ்சை, ரூபக தாள சப்தம்	113-114

பக்க எண்

சட்டநாதர், ராமர் - திரிபுடைதாள சப்தம்	115
வேங்கடரமணர் - த்ருவதாளசப்தம்	116-119
மிச்ரதாளச் சொற்கட்டு	121-122
தீர்மான சொற்கட்டு	
ஆதிதாளச் சொற்கட்டு, விளம்பகாலச் சொற்கட்டு	123-134
சசக நாட்டிய சப்தம், குழைந்த சேர்வையும்	135-137
திச்ர சொற்கட்டு முதலியன -	
பிரதாபராம சப்தம்	138-150
மெலட்டூர் உன்னதபுரீசர் சப்தம்	151
பரதம் ராமகவி சப்தம்	152
பிரதாபசிம்ஹராஜன்பேரில் சப்தம்	153
இரண்டாம் துளஜாஜிராஜன் பேரில் சப்தம்	154
இரண்டாம் சரபோஜிராஜன் பேரில் சப்தம்	155

AN APPEAL

Manuscripts on Palmleaf or Paper of the ancient works of the wise men of the past, are the great treasures, solely inherited by the Nation and it is the moral obligation of persons who possess them to preserve them safely for the future generations of mankind.

Probably you have some of these in your possession or you know friends or neighbours who possess them. You can make a great contribution to the cause of the preservation not only of our National Culture but also to the Culture of Humanity as a whole by arranging to present such manuscripts to the famous T. M. S. S. M. Library, Thanjavur.

The Manuscripts so presented will be accepted and acknowledged with pleasure and gratitude by the authorities of the Library, preserved with meticulous care and made available to successive generations of readers and scholars for study and research. The hitherto unpublished works found among them, will be printed and published in due course, as facilities occur, with the expression of the Library's gratitude for your gift.

The great Scholar King of Tanjore, **Rajah Serfoji,** has attained immortal fame by dedicating enormous time and wealth to the expansion and firm establishment of this world famous **"Sarasvati Mahal Library".** It is open to you to share the honour of Serfoji, in your own measure by contributing your manuscripts to the great institution built by him.

This great Honour is beckoning to you to accept it. Will you hasten to take it up? The Library waits for your answer.

DISTRICT COLLECTOR AND DIRECTOR
Sarasvati Mahal Library,
Thanjavur.

॥ श्रीः ॥

तकारस्ताण्डवं प्रोक्तं लकारश्शरक्तिरुच्यते ।
शिवशक्तिसमायोगत्ताळ इत्यभिधीयते ॥

சப்தம்

எனும்

தாளச் சொற்கட்டு

உள்ளே......

* **பரதம் காசிநாதன்**
  இயற்றிய
  சப்தங்கள்

* **சகஜி மன்னர்**
  இயற்றிய
  சலாம் – ஜக்கிணி
  தருக்கள்

* **பரதம் நாரணகவி**
  இயற்றிய
  சப்தங்கள்

|| श्रीः ||

|| भरतम् काशिनाथकवि विरचित शब्दानी ||

பரதம் காசிநாதன் இயற்றிய சப்தங்கள்

तधिधिमिधितरितधिमि धीकुणंतरिकुडकधिमि धिमिजगणगजग-झें झेनुतांतरि – रेकुझेकुणक – **कञ्जदळार्चित काशिनाथनुत – कुञ्जरवदना कुमारसामि वरसहोदरा तञ्जनायकुनि – तनयगणेशा – सलामु** धिद्धि – तळंगुतकधिमि – तोंगतधिंगिणतोम् || १

ததிமிதிதரிததிமிதீகுணம்தரிகுடகதிமி - திமி ஜகணகஜக - ஜேம் ஜெனுதாம்தரி - ரேகு ஜெகுணக - ***கஞ்ஜ தளார்சித காசிநாதநுத - குஞ்சரவதனா குமாரசுவாமி - வரஸஹோதரா தஜநாயகுனி - தனய கணேசா - ஸலாமு*** *தித்திதளங்கு தகதிமி - தோங்க ததிங்கிணதோம்.* 1

तद्धणतक – तङ्जेनुतक – धिमितक – तत्तळांगुता किटतक ताकिटतक – तारिरेतांत – ताहततझेंता – **वरकाशिनाथ विनुत चरित्रा – वामनरूपा – महेश्वरपुत्रा – तरिकुझेकुझे – झेंतधणेकु करुणजूडु माषट्ल पराकु – शायक विघ्नविनायक देवा – सलामु** धिद्धितळांगुतकधिमितोंगतधिंगिणतोम् || २

தத்தணதக - தஜ்ஜெனுதக - -திமிதக - தத்தளாங்கு தாகிடதக தாகிடதக - தாரிரேரிதாம்த - தாஹத தஜேம்தா - **வரகாசிநாதவிநுத சரித்ரா - வாமனரூபா மகேச்வர புத்ரா -** தரிகுஜேகுஜே ஜெம்த தணேகு - **கருணஜூடு மாபட்ல பராகு சாயக விக்னவிநாயக தேவா - ஸலாமு** தித்தி தளாங்கு தக திமி தோங்க ததிங்கிணதோம். 2

तरिकिड्ड तोंतों - तोंतोंकिटझेनु - झेनकिटकु कुन्धरि - तमोधिंतता - **काशिनाथनुतुड्डु - केशव सुतुड्डु - हरुजिकिवैरि - वानिकन्न चक्कदनमु कलिगिन शिखिवाहन - सुब्रह्मण्यदेवा - सलामुरे -** रेकिणतकिणधण तधिंगिणतोम् ॥ ३

தரிகிடு தோம்தோம் - தோம்தோம் கிடகிட ஜெனு ஜெனகிட குகுந்தரி - தக்கெதிம்ததா - **காசி நாதநுதுடு - கேசவஸூதுடு - ஹருணிகிவைரி - வானிகன்ன சக்கதனமு கலிகின சிகிவாஹன - ஸூப்ரமண்ய தேவா - ஸலாமு** - ரேகிணம்த கிணதண ததிங்கிணதோம். 3

धरितधणंधण - तजेनुतकिटतत - रितरितकिटधिमिधीनुतहत धी - धरिरेकिणाकु - किणणंतारित - **वरकाशिनाथनुत रंगनाथ - पराकु साहेबु सलामु देखो** तळांगुतकधिमितोंगततर्दिगिणताम् ॥ ४

தரிததணம்தண - தஜெநுதகிடதத - ரிதரிதகிடதிமி தீனுதஹதகதீ - தரிரேகிணாகு - கிணணம்தாரித - **வர காசிநாதநுத ரங்கநாத - பராகு ஸாஹெபு ஸலாமு தேகோ -** தளாங்குதகதிமிதோங்க ததிங்கிணதோம். 4

तद्धिन्नं - नंतारित - तत्कढिकुणकजग - झेंतारितकिणझें - झेंतकुंतरे - तकुंतरे - कुंतरुंतता - तत्तढिकु **नृत्तकाशिनाथनुत** - झेनुत - **भुजंगशयन** - **विहंगवाहन** - **रंगनायकि प्राणेश** - **वैकुण्ठनिवासा** –तोंगुतक्किणता **तुंगरंगनाथा** – **सलामुरे** - रेकिणंतकिण-धणतधिंगिणंतोम् ॥ ५

தத்தின்னம் - நம்தாரித - தகதடிங்குணகஜக - ஜேம்தாரிதகிணஜேம் - ஜேம்தகுந்தரே - தகுந்தரே - குந்தரும்ததா - தத்தடிங்கு **நிருத்த காசிநாதநுத** - ஜெனுத **புஜங்கசயன விஹங்கவாஹன ரங்கநாயகி ப்ராணேச** - **வைகுண்டநிவாஸா தோங்குதக்கிணதா** - **துங்க ரங்கநாதா** - **ஸலாமுரே** - ரேகிணம் - தகிண தணததிங்கிணதோம். 5

किटतकिटतकिटतकधरिकिड्ड - धरिकिड्ड - धरिकिटतक - धरिक्टितक - तकणंगित्तगणग - तकणगधिगणग - जगणगणंतरि - किटतताकुताकिटधणंधण - **नटनकाशिनाथनुत** - **पदाम्बुज, वेङ्कटरमणा** – **सङ्कटहरणा** – **पङ्कजनयना** - तोंगतधिंगिणतोम् ॥ ६

கிடதகிடதகிடதகதரிகிடு - தரிகிடு - தரிகிடுதக தரிகிடதக - தகணங்கித்தகணக - தகணகதிகணக - ஜகணகணம்தரி - கிடததாகு தாகிட தணம்தண - **நடன காசிநாதநுத** - **பதாம்புஜ** - **வேங்கடரமணா** - **ஸங்கடஹரணா** **பங்கஜநயனா** - ததிங்கிணதோம். 6

तझेनुत - तझेनुत - झेतरित - धरित **काशिनाथ विनुत देवि** - **पक्षिवाहनि** – **पद्मलोचन** – **ममु रक्षिम्पवे** – **महालक्ष्मि सलामु** धिद्धि तोंगतधिंगिणतोम् ॥ ७

தஜெனுத - தஜெனுத - ஜேம்தரித தரித ***காசிநாத விநுத தேவி பக்ஷிவாஹனி - பத்மலோசனி - மமு ரக்ஷம்பவே - மஹாலக்ஷ்மி*** *ஸலாமு தித்தி தோங்க ததிங்கிணதோம்.* 7

तग्गेझेंझें झेनाधणा – झेनकुंधरिता – कुरुंतरुंतरुंतधिं – धणंतकिटतरिता – झेनेकुजकजेंतरुंतधिंगिधिंतता **काशिनाथ – वन्दित चरणाम्बुज – करिवर** तझेझेकिण – **पक्षिवाहन – लक्ष्मीनारायण –** धणझेनकिटतोंगतधिंगिणतोम् ॥ ८

தககெஜேம் ஜேம் ஜெனா தணா ஜெனகுந்தரிதா - குரும்தரும் தரும் ததிந் - தணம்தகிடதரிதா - ஜெனகுஜகஜேம் தரும் ததிங்கிதின்ததா - ***காசிநாதவந்தித சரணாம்புஜ - கரிவரத*** *- தஜே ஜேகிண -* ***பக்ஷிவாஹன - லக்ஷ்மிநாராயண*** *- தணஜெனகிட தோங்க ததிங்கிணதோம்.* 8

ताहधीनुताहन्नतटंगिणतधिनतहतधी – धणकुझेनुता –झेनुझेनुता– **कनकतञ्जनायकि प्राणेशा – काशिनाथवन्दित सर्वेशा – दिनकर पुष्करणीतीरवासा धीरवीरनरसिंहा सुरेशा** – तझेनु अझेनु अझेनुता + अ – तकझेनुता – तकझेनुअझझेनुझेनुता – तकझझेनुता – तझझेनु – अझझेनुझेनुता –अज्झेनुअझेनुता – तझेनुता – तक्झेनुता – तकझझेनुतकझेनु – तझेकिणंतरि – तकतक – धिकितक तोंगतधिंगिणतोम् ॥ ९

தாஹதீனுதாஹன்னதடங்கிண ததினதஹததீ - தணகுஜெனுதா -ஜெனுஜெனுதா - ***கனக தஞ்ஜநாயகி ப்ராணேசா - காசிநாதவந்தித ஸர்வேசா - தினகர புஷ்கரணீ தீர வாஸா தீரவீர நரஸிம்ஹா ஸுரேசா*** *- தஜெனுஅஜெனு ஜெனுதா + அ - தகஜெனுதா - தகஜெனு அஜ்ஜெனுஜெனுதா*

தகஜ்ஜனுதா - தஜ்ஜனுஅஜ்ஜனுஜனுதா - தகஜனு அஜ்ஜனு அஜனுதா - தஜனுதா - தகஜனுதா தகஜ் ஜனுதகஜனு - தஜேகிணம்தரி - தகதக - திகிதக - தோங்க ததிங்கிணதோம். 9

ननंधरिकिण – किणंधरितकिण – नंगिटतकतक्किट तकधरिकुडु – धरिधरिकिटतक – धिरिधिकिटतक – **कन्नेडशायक काशिनाथनुत वन्हिवनेश – वरतजेश सलामु** धिद्धितोंगतधिंगिणतोम् ॥ १०

*நநம்தரிகிண - கிணம்தரிதகிண - நங்கிடதகதக்கிட - தகதரிகுடு - தரிதரிகிடதக - திரிதிரிகிடதக - **கன்னெட சாயக காசிநாதநுத வன்ஹிவநேச - வரதஜ்ஜேச - ஸலாமு** தித்திதோங்க ததிங்கிணதோம். 10*

तद्धिद्धिमि – तधीनुताहतधिमि – धिमितधिमितधिमि – धणत धणतधण – ताझेनकुझक – झेकुझें तरित – **काशिनाथविनुतीशुडैन तञ्जेशुनिपट्टपुराणि – अलिकुलवेणि शर्वाणि – धरिरेकिणणंतारितरतरित – परदेशुल रक्षिञ्चेटि विरुदु नीवेयम्मा – येमम्मा –पराकुशायकुवम्मा – करुणजूडवे यानन्दम्मा – सलामु** धिद्धितोंगतधिंगिणतोम् ॥ ११

*தத்தித்திமி - ததீனுதாஹததிமி - திமிததிமிததிமி - தணததணததண - தாஜெனகுஜக - ஜோகுஜெம்தரித - **காசிநாதவிநுதீசுடைன தஞ்ஜேசுனிபட்டபுராணி - அலிகுலவேணி சர்வாணி - தரிரேகிணணம் தாரிதரதரித - பரதேஸுல ரக்ஷிஞ்சேடி பிருதுநீவேயம்மா - ஏமம்மா - பராகுசாயகு வம்மா கருணஜூடவே யானந்தம்மா - ஸலாமு** தித்திதோங்க ததிங்கிணதோம். 11*

किटततरिकु – ढिंढिंकुकुतक्कुकु – **नटनकाशिनाथ विनुत देवा – दक्षाध्वरहर शुक्कु शशिधर – दक्षिणामूर्ति गौरीशा सलामु** धिद्धितोंगतधिंगिणतोम् ॥ १२

*கிடததரிகு - டிம்டிங்குகு தக்குகு - **நடனகாசிநாதவிநுத தேவா - தக்ஷாத்வரஹர சுக்கு சசிதர - தக்ஷிணாமூர்த்தி கௌரீசா - ஸலாமு** தித்தி தோங்க ததிங்கிணதோம். 12*

धीगुणांगुतों – धिंधिंकिणांगतों – अकिटतों – अडकतों – अतधिंगिणतों – तधरेकिमा – किणणकजकणा – **वेद काशिनाथ विनुत चरणा – विभूतिरुद्राक्षाभरणा – इभचर्माम्बर इन्दुशेखरा** – रतरितरतरित धरितधरितधरि–धिमितधिमितधिमि–धिननधणणझन – झननकिणणधण– तहतधितहतधितहतहतहतधीं – झेन्नु – तधिअधिअधिअधिअधि तोंगतधिंगिणतों – ता ॥ १३

*திங்குணாங்குதோம் - தின்தின்கிணாங்குதோம் - அகிடதோம் - அடகதோம் - அததிங்கிணதோம் - தகரேகிணா - கிணணகஜகணா - **வேதகாசிநாதவிநுத சரணா - விபூதிருத்ராக்ஷாபரணா - இபசர்மாம்பர இந்துசேகரா** ரதரிதரதரித - திததரிததரி - திமிததிமிததிமி - தினன தணணஜன - ஜனனகிணணதண - தஹததின் தஹத தின்தஹதஹதஹததீன் ஜென்னு - ததிஅதிஅதிஅதிஅதி- தோங்க திங்கிணதோம் - தா. 13*

धंधणतधण – धणतझेनुतधिमि – झेंतरिकिण – **काशिनाथ सन्नुत – नन्दिवाहना – नागभूषमा – चन्द्रशेखरा इन्द्रसन्नुता सलामु** धिद्धितोंगतधिंगिणतोम् ॥ १४

தந்தணததண - தணதஜெனுதமி - ஜேம்தரிகிண **காசிநாத ஸன்னுத - நந்திவாஹனா - நாகபூஷணா சந்தரசேகரா - இந்தரஸன்னுதா - ஸலாமு** தித்திதோங்க ததிங்கிணதோம். 14

तद्धिकिट - धिंधिमिकिटताकिट - तळांगुतद्धिकिट - तरिकिटतक - धिंधिमिधिमि - झेनुझेनु - **भूसुरकुलवर - काशिनाथनुत वेदवनेशुनि - नरवरसुरमुनुलरहरहरयन** तोंगतधिंगिणतोम् - ता ॥ १५

தத்திகிட - திந்திமிகிடதாகிட - தளாங்குதத்திகிட தரிகிடதக - திந்திமிதிமி ஜெனுஜெனு - **பூஸுரகுலவர காசிநாதநுத - வேதவனேசுனி - நரவரஸுரமுனு லரஹரஹரயன** தோங்கததிங்கிணதோம் - தா. 15

ताहत्तधिमिधिमि - धिमितरिकिटतक - ढिंकुतक्कुद्रुगिड्डु - धळंगुता - धणा - धणतझेनु - धिमितकिट - तत्तत्ताधिन् - तत्ताधिन् - तधिंतधित्तक - **काशिनाथनुथ चिदम्बरेश्वर गधिंतधिं - दिनदिनमुनु - तनमनमुन - पेनगोनि - नेनरुन ओनरनु** - तकतधिंगिणतोम् ॥ १६

தாஹத்ததிமிதிமி - திமிதரிகிடதக - டிங்குதக்கு த்ருகிடு - தளங்குதா - தணா - தணதஜெனு - திமிதகிட - தத்தத்தாதின் - தத்தாதின் - ததின்ததித்தக - **காசிநாதநுத சிதம்பரேச்வர கதின் ததின் - தினதினமு - தனமனமுன - பெனகொனி - நெனருன ஒனரனு** தகததிங்கிணதோம். 16

तक्किणतकिणत – किणतकिणतयनि – **मक्कुवतानै – काशिनाथुडु पुङ्गळिंपग वेलयुदुन्न मा – दुर्गापरमेश्वरी पराकु – सलामु** धिद्धितोंगतधिगिणतोम् ॥ १७

தக்கிணதகிமத - கிணதகிணதயனி - ***மக்குவதானை*** *காசிநாதுடு -* ***புங்களிம்பக வெலயுசுன்ன*** *மா* ***-துர்கா பரமேச்வரிபராகு - ஸலாமு*** *தித்திதோங்க ததிகிணதோம். 17*

ताअतधिमिधिम्मिधणंतोंतोंधिम्मिताह – तरिक्किट्ट तहकिण्ण तहततोम् – धिम्मितरिकिट – तहकिण्णताहततां – धिम्मित रिकिटतहकिण्ण – झें अतरुं अतकुं अतताकिण – झेंअतरुं अतकुंतताकिण्ण – धरितझेकिणा – ताकुझेकुतक – **करुण जूडरा – काशिनाथनुत – परळिवैद्यनाथेशसुरेश – शाबासु सलामुरे – हौदुमेलुहो–** किणकिर्रटक्कतो – अधिगिणधिधिगिण – किणतकिर्रटक्कतो – धिगिणधिधिगिण – किणतकिर्रटक्क– किणतकिर्रटक्क – धण अतकझनु अतकधिमिधिकितकिटतधिंगिणतोम् ॥ १८

தா அததிமிதிம்மிதணம்தோம்தோம் திம்மிதாஹ - தரிக்கிட்ட தஹகிண்ண தஹததோம் - திம்மி தரிகிட - தஹகிண்ண தாஹததாம் - திம்மிதரிகிட தஹ கிண்ண - ஜேம் அதரும் அதகும் அததாகிண - ஜேம் அதரும் அதகுந்ததோ கிண்ண - தரிதஜேகிணா - தாகுஜேகுதக ***கருணஜூடரா - காசிநாதநுத - பரளி வைத்யநாதேச ஸுரேச - சாபாஸு சலாமுரே ஹௌதுமேலுஹோ -*** *கிணகிர்ரடக்கதோ அதிகிண திதிகிண - கிணதகிர்ரடக்கதோ - திகிணதிதிகிண - கிணத கிர்ரடக்ககிணதகிர்ரடக்க - தண அதகஜெனு - அதகதிமி திகிதகிடததிங்கிணதோம். 18*

ताकिटकिटतक - किटतकततक - डकतजगततक - झेंतरिजगतरिकुकुन्धरि - तरिकुधणद्धणता - **काशिनाथ विनुत घनकमलापुरीवासमहेशा - वन्दनमुन जनुलन्दरु निनु पोन्दुशायग** - धद्धणधणधणतोंगतधिंगिणतोम् ॥ १९

தாகிட கிடதக - கிடதகததக - டகதஜகததக - ஜேம்தரி ஜகதரிகுகுந்தரி - தரிகு தணத்தணதா - காசிநாதவிநுத ***கநகமலாபுரீவாஸ மஹேச - வந்தனமுன ஜனுலந்தரு நினு பொந்து - சாயக*** *- தந்தணதணதண தோங்கததிங்கிணதோம்.* 19

॥ अटताळशब्दम् ॥

तद्धिक्किटतकझेतरि - तरिकुकु - तरिकुडिडिकु - तढिंकु ढिंकुकु - ढिंकुकुतद्धिक्किटतक - झेझेकिटतक - ताताकिटतक ताकिड्डुतद्धिक्किटतक - तोंगतधिगिणतोम् - ताजेनकुझेकुकिणरेकु **काशिनाथविनुत पराकु - गङ्गाजटामकुटनटनमहालिङ्ग जय वृषभतुरङ्ग** - तोङ्गिटतकणंतरि - धणरेरेरि कुंतकुंत रि - **घनवेला - वैद्यालिङ्गनितनया वरमुद्दुकुमारा** ताकिटतक - ताकुझेकुणक - **सिद्धामृत तीरवासशाभासुरे सल्लामुरे जीवुरे** - तरिगेधिझेंगेधिंतझें - किटतकझेंता - अझेंता - किटतक - झेंताझेंझेंता - देहिणंतरिकिटतक - तळांगुतद्धिकिर्रकिणझेकु झेकिटतकताताकिटतक - तकतधिंगिणतोम्॥ २०

அடதாள சப்தம்

தத்திக்கிட தகஜெம்தரி - தரிகுகு - தரிகுடிடிகு - தடிங்கு டிங்குகு - டிங்குகு தத்திக்கிடதக - ஜெஜெகிடதக - தாதா

கிடதக - தாகிடு தத்திக்கிடதக - தோங்கததிகிணதோம் - தாஜெனகு ஜேகுகிணரேகு - **காசிநாதவிநுத பராகு - கங்காஜடாமகுட நடன மஹாலிங்க ஜய வ்ருஷபதுரங்கா** - தோங்கிடதகணம்தரி - தணரேரிகுந்தகுந்த - ரி - **கனவேலா வைத்யலிங்குளிதனயா வர முத்துக்குமரா** - தாகிடதக - தாகுஜேகுணக **ஸித்தாம்ருததீரவாஸ சாபாஸுரே ஸல்லாமுரே ஜீவுரே** - தரிகெதிஜேம் தகெதிம் தஜெம் - கிடதகஜம்தா - அஜேம்தா - கிடதக - ஜேம்தாஜேம்ஜேம்தா - தேஹிணம் தரிகிடதக - தளாங்குதத்திகிர்ரகிணஜேகு - ஜேகிடதக தாதாகிடதக - தகததிங்கிணதோம். 20

॥ अटताळशब्दम् (रामशब्दम्) ॥

तद्धिमिद्धिमितहकिणण - झेंतरेकिण - किकिणंकिण - किणतकिणण - धणतधणधण - **कामजनकाभिराम - दशरतराम - कोसलराम - रविकुलसोम - जयरघुराम** - ततकिटकिटत - ढणढेकिणं - किटतक - धिक्विणं - देहिणं - गेधिधिं - **घेटकिबलुताकि - संहर** तककिण - **मेटि कौशिकयागरक्षण कोटिमन्मथरूपलक्षणा** - तझझेनुझझेनुतहतझेनुतक - झेंतरूतकदेहिणा-**अहल्याशापविमोचना - हरशरासनखण्डन** - किटतक -धंधणद्धण - धणगेधिर्धीधीनुताहत - ताकुझेकुकु - **जानकी कल्याणी भुजवलभीमा - घनमुनिरामा मदगर्वभञ्जना** - किटतक - झेंझेनकुझेकिणं तकतक - **वेदकाशिनाथनुत - साकेतपट्टणवास - सीतानाथ वरकोदण्डराम सलामुरे** - धरितकिणतक - जगतकुंतरि- धरिकुधरिधरि - तहतधिगिणतोम् ॥ १

இராமர் பேரில் அடதாள சாப்பு சப்தம்:-

*தத்திமித்திமிதஹகிணண - ஜேம்தரேகிண - கிகிணம் கிண - கிணதகிணகிண - தணததணதண - **காமஜனகாபி ராம - தசரதராம - கோஸலராம - ரவிகுலஸோம - ஜய ரகுராம** - ததகிடகிடத - டணடேகிணம் - கிடதக - திக்கிணம் - தேஹிணம் - கெதிதின் - **கேடகிபலுதாடகி - ஸம்ஹார** தககிண - **மேடி கௌசிக யாகரக்ஷண - கோடி மன்மத ரூபலக்ஷணா** - தஜ்ஜனுஜனுதஹதஜனுதக - ஜேம்தரும்தகதேஹிணா - **அகல்யா சாபவிமோசனா - ஹரசராஸனகண்டன** - கிடதக - தந்தணத்தண - தணகெதிதீன் - தீனுதாஹத - தாகுஜேகுகு - **ஜானகி கல்யாணி - புஜபலபீமா - கனமுனிராமா மதகர்வபஞ்ஜனா** - கிடதக - ஜேம்ஜெனகுஜேகிணம் தகதக - **வேதகாசிநாதநுத - ஸாகேதபட்டணவாஸ - ஸீதாநாத வரகோதண்டராம ஸலாமுரே** - தரிதகிணதக - ஜகத குந்தரி - தஹததிகிணதோம். 1*

तकिटधिकिटक – किटकुझेंतरि झेकिणंतरितरिकु – ढिकुकु – ढिकुतद्धिकिटत – ढकतक – णकतधकधक – **सकल सुरमुनिनरवरस्तुत – रविकुलांबुधिराजदशरथराजतनया** – तकुतकुंतरिकिण – **मातृपितृवाक्य परिपालन** – तरिकुझेंझेंजकुणकजग – णकजकुंकुंधरि – **धरिकुधरिधरि – जडलतो घनअडविलोपल वेडलियसुरुल – खण्डतुण्डमुगानुसेयु प्रचण्डमारोद्दण्डरामा** – तक्कुढिकुकु ताधणंतरि **अट्टहासमुतोसमुद्रमु – गट्टिग्रक्कुन – दुष्टरावण – कुम्भकर्णादुलकोट्टि – विभीषणुनिकि पट्टम्बुगट्टि – नयोध्यारामा** किटतक – तधिमिद्धिमितहतधिमि – तधिंदाकिट **ताकुयनि – गन्धर्वमेळमुप्रोयगा – कविजनुलु भुदिराज**

राजलु – काशिनाथुडु पोगडगा – उविदलन्दक – धवळशोभनमुलु नुतिंम्बगा – वेलसितौर – तरिकुझेंझें – तझेंझेंझें – झेनुत – अधिमिधिमि अकिणकिणत – धणधणतधिंधिं – धित्तधिमितक – धिमिद्रुगिड्डुतक – **धीनरक्षकुडैन रामा – जानकीपट्टाभिरामा** – रगणगणतरिकुर्ढिक्कु – ढिंकुतद्धितहततधिंगिणतोम् ॥ २

தகிடதிகிடக - கிடகுஜேம்தரி - ஜேகிணம்தரிதரிகு - டிங்குகு - டிங்குதத்திகிடத - டகதக - ணகததகதகத - **சகல சுரமுனிநரவரஸ்துத – ரவிகுலாம்புதிராஜ தசரத ராஜ தனயா** – தகுதகுந்தரிகிண - **மாத்ரு பித்ருவாக்ய பரிபாலன** தரிகுஜேம்ஜேம்ஜகுணகஜக - ணகஜகுகுந்தரி - தரிகுதரிரி - **ஜடலதோ கண அடவிலோபல – வெடலி அசுருல – கண்டதுண்டமுகானுசேயுப்ரசண்ட மாரோத்தண்டராமா** தக்குடிங்குகுதாதணம்தரி - **அட்டஹாசமுதோ சமுத்ரமு – கட்டி க்ரக்குண – துஷ்டராவண – கும்பகர்ணாதுலகொட்டி – விபீஷணுனிகி பட்டாம்புகட்டி – நயோத்யா ராமா** – கிடதக - தந்திமித்திமிதஹத்திமி - ததின்தாகிடதாகுயனி - **கந்தர்வமேளமு ம்ரோயகா – கவிஜனுலு புவிராஜ ராஜுலு – காசிநாதுடு பொகடகா – உவிதலந்தரு – தவளசோபனமுலுநுதிம்பக – வெலஸிதௌரா** – தரிகு ஜேம்ஜேம் - தஜேம்ஜேம்ஜேம் - ஜெனுத - அதிமிதிமித - அகிணகிணத - தணதணத தின்தின் - தித்தநிமிதக - திமிதத்ருகிடுதக - **தீனரக்ஷகுடைனராமா – ஜானகி பட்டாபிராமா** - ரகணகணம்தரிகுடிங்குகு - டிங்குதத்தி தஹததிங்கிணதோம். 2

तद्धणंधिमिताहझेंतरि – झेनकुतरिक्कु – तरिकुढिढिक्कु – ढिढिकु ढिकुकु –ढिकुतक्कुकु – तकुंतकिटतरि –तरिकुतकणक –तकणणकणक – णकणणंगि– किणजनकजक –णगजणंतक –णंतरुंतक –रुंतधिकितक –

धिद्धिकिड्ड – धींगुणांगुतकतरिकिटतकतां –तैतत्तता – धरितकिणझेझेकिणं तरि – **धरणीरथमै देवजनुलन्दरुचलंगिरुगेडलनेगडा – हरुवुगा शङ्करुनिकितवै अजुडुसारधिगानुपोगडा** तोंगुतक्किटकिटतकणंगि – **कालिंगुनिपैनटनमु** – तत्तधिंधितधिंधिंधिंता – धणधणतझेनुझेनुझेनुत – धिमिधिमि – किट्ट – **ताकुयनि ईलागुनाडिन – हरिनिबाणमुजेसि मेरु – गिरिचापमुगानु बट्टि – दुरगमुनघननारिगानु – ऊचिबलुविल्लेत्ति वञ्चि** – ढुगिडुततकतक – तकततकयनि – **मेघमुगर्जिञ्च – जगमुलु कदल – असुरुलुवेदर – अदरा – त्रिपुरसंहारमुनु जेसिन – दिनकरा – युतकोटितेजा – दिव्यपादाम्बुज गिरीशा – काशिनाथनुतीश रजितगिरीश – तञ्जपुरीश जीवुरे सलामुरे** तकणंगितकतरिकिटतक – धणणतत – इझेनुझेनुतत – धिमिद्धिमितत्तहतहतता – धणझेनुधिमि – तहतकिटतरि धरिकु धरिधरि – तहततधिंगिणतोम् ॥ ३

தத்தணம்திமிதாஹஜெம்தரி - ஜெனகுதரிகுகு - தரிகு டிடிகுகு - டிடிகுடிங்குகு - டிங்குதக்குகு - தகுந்தகிடதரி - தரிகுதகணக - தகணணதணக - ணகணணங்கி - கிணஜனக ஜக - ணகஜணம்தக - ணம்தரும்தக - ருமந்ததிகிதக - நித்திகிடு - தீங்குணாங்கு தகதரிகிடத தாம் த - தைதத்ததா தரிதகிணஜேஜேகிணம்தரி - ***தரணீரதமை தேவஜனுலந்தரு செலங்கிருகெடல நெகடா – ஹ்ருவுகா சங்கருணிகிதவை – அஜுடுசாரதிகானுபொகடா*** – ***தோங்கு தக்கிடகிடதக ணங்கி – காளிங்குனிபை நடனமு*** – *தத்ததின்திந்ததின் தின்தின்தா - தணதணதஜெனுஜெனுத திமிதிமி - கிட்ட - **தாகுயனி – ஈலாகு நாடின – ஹரினி பாணமு ஜேஸி மேரு – கிரி சாபமுகானுபட்டி – துரகமுனு கனநாரிகானு – ஊசி பலுவில்லெத்திவஞ்சி** – த்ருகுடுததகதக - தகததகயனி -*

மேகமு கர்ஜிஞ்ச - ஜகமுலுகதல - அஸுருலு பெதர - அதரா - த்ரிபுரஸம்ஹாரமுனு ஜேஸின - தினகராயுத கோடிதேஜா - திவ்ய பாதாம்புஜ கிரீசா - காசிநாதநுதீசா ரஜிதகிரீசா - தஞ்சபுரீசா ஜீவுரே - சலாமுரே - தகணங்கிதகதரிகிடதக - தணணதத - ஜ்ஜெனு ஜெனுதத - திமித்திமிததத்தஹத ஹதததா - தணஜெனுதிமி - தஹதகிடதரி - தரிகுதரிதரி - தஹததிங்கிணதோம். 3

तद्धिकिटतकझेंतझेकिणंतरि – धरिकुडिडिकु – ढिंढिंकुकु – डिकुडिकु – डिकुजकुकुजनक – जकजकुकु जजक – जकुकु जकुकु झेझेकिणंतरि **चेलुवुडैन कावेटिरङ्गनि – चरणाम्बुजमुल नेरनम्मितिरा** – रतरितरित रित – रितरितरतरितधणातधरितधरि – धिमितधिमितधिमि – धिनन धिणण जन – जननकिणणधण धणतधणतधण – झेनुतझेनुझेनु – **कनकाभरणा – कमनीयचरणा – वनजलोचना – शरधिशयना – भळिरमेलु शाभासु सलामु पराकु तक** – धणाकुजग – किणाकुकिणाकुणंतरि – किटतरिकिटतक – किटधणा – धणतझेनु – झेनतकिणा – किणतकढि – ढिकुतधीं – धिंधिंनंगुड्डु – नंगुड्डु धरिकुड्डु – धरिकिटतक – धिरिकिटतक – धरिगिड्डु – तधिंगिणतों तळंगुतधिंगिणतोम् ॥

१

